# பத்திரிக்கை செய்தி

தேனி மாவட்டத்தில், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் வாயிலாக (சமூக நலன் மற்றும் சத்துணவுத்துறை) குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கான விளையாட்டு மற்றும் பொழுது போக்கு மையம் [Play and Recreation for children (PARC)] -என்ற சமுதாய மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

குழந்தைகள் இல்லங்களில் தங்க வைக்க முடியாத பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்காக அமைக்கப்படும் இம்மையத்தினை நிறுவ இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழ் மற்றும் விதிகளின் படி பதிவு செய்யப்பட்ட குழந்தைகள் இல்லங்கள் / திறந்த வெளி இடங்கள் / தகுதிவாய்ந்த நிறுவனங்கள் மூலம் கருத்துருக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இம்மையத்தை அவர்களே நிர்வகிக்க வேண்டும்.

குழந்தைகள் இல்லங்கள் தாங்களாகவோ பிற நிறுவனங்களுடன் இணைந்தோ இதனை செயல்படுத்தலாம். அந்நிறுவனம் நிதி ஆயோக் (NITI Aayog) -ல் பதிவு செய்தல் அவசியம். அந்நிறுவனத்தின் மீது இந்திய நீதிமன்றங்களில் எவ்வித கிரிமினல் வழக்குகளும் நிலுவையில் இல்லாது இருப்பதும், நல்ல நிதி நிலைமையை பெற்றிருக்கும் நிலையில் இருப்பது அவசியம். தேர்ந்தெடுக்கப்படும் அந்நிறுவனத்திற்கு மாவட்ட ஆட்சியர் வாயிலாக அனுமதி (Approval) வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்டு [Play and Recreation for children (PARC)] நடத்தவிருக்கும் நிறுவனத்திற்கு 2 பயிற்றுநர் / ஆசிரியர் ரூ.14,000/- மாதம் வீதமும், விளையாட்டுப்பொருட்கள் வாங்க ரூ.48,000/- (வருடத்திற்கு) இதர சில்லரைச் செலவினமாக ரூ.25,000/- (வருடத்திற்கு) மற்றும் நிர்வாக செலவினங்களுக்காக ரூ.61,350 ஆக மொத்தம் ரூ. 4,70,350/- வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் தொடர்பாக ஆவணங்கள், நிரந்தர இருப்புப் பதிவேட்டில் இல்லங்களில் பாதுகாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு, ஆய்வின் போது சமர்ப்பிக்கப்படவேண்டும். இதனைச் செயல்படுத்தும் நிறுவனத்திற்கு PFMS மூலமாக வங்கிக்கணக்கில் துறை மூலம் பணம் செலுத்தப்படும்.

இது தொடர்பான விபரங்கள் மற்றும் வழிமுறைகள் மாவட்ட இணையதளத்தில் (https://theni.nic.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, விளையாட்டு மற்றும் பொழுது போக்கு மையம் அமைத்து பராமரித்திட தகுதியுடைய நிறுவனங்கள் தங்களுடைய விண்ணப்பங்களை,

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
ஒருங்கிணைந்த அரசு பல்துறை வளாகம் - II,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தேனி - 625 531
அலைபேசி எண். 8903184098,
மின்னஞ்சல் முகவரி sd.dcpu.theni2@gmail.com
-என்ற முகவரிக்கு 22.08.2019-க்குள் அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், கூடுதல் விபரங்களுக்கு மேற்காணும் முகவரியில் தொடர்புக் கொண்டு அறிந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.